முருகப்பெருமான் துணை

**மகான் குகைநமச்சிவாயர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**18.01.2024**, வியாழக்கிழமை

1. யோகராஜனே ஆறுமுக அரங்கா
உண்மை நெறி காட்டும் தேசிகா
வாகுடனே ஞானவழி காட்டும்
வள்ளலே ஞான தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் துல்லிய ஆசி
ஆசிதனை சோபகிருது கலை திங்கள்
அறிவிக்க சதுர் திகதி குருவாரம்
(சோபகிருது வருடம் தை மாதம் 04 ம் நாள், 18.01.2024, வியாழக்கிழமை)
3. வாரமதில் குகைநமச்சிவாயர் யானும்
வழங்குவேன் உலகோர் நலம்பெற
சோரமின்றி ஞானவான்கள் படை
செகமெங்கும் உருவாக்கும் வண்ணம்
4. வண்ணமுடன் அவதாரம் எடுத்து
வல்லமையான ஞானம் தந்தருள
எண்ணமதில் உலகோர் ஏற்று
இனிதே ஞானம் பயின்று வர
5. வருகவே உலகம் எங்கிலும்
வள்ளல் தன்மை ஏற்ற
முருகப் பெருமானை வணங்குகின்ற
முழுமை கண்ட மக்கள்களாக
6. ஆகவே அரங்கன் தொடர்புக்குவர
அனைவரும் ஞானிகள் ஆகவே
வகையான தீட்சை ஏற்றுவர
வரம்பெற்று உலகோர் சிறப்பர்

7. சிறப்பான ஞான உலகம் படைக்க
சித்திமிகு தரும வழிகளை காட்டி
அறம் வளர்க்கின்ற ஆற்றல் மிக்க
அறிவிப்பேன் தரும சாலைகளை படைத்து
8. படைத்து உலகோர் பசிபிணி விரட்டும்
பரோபகாரமிக்க சேவை வளர்த்திட
தடையற உலகோர் பின்பற்றி
தான தருமம் வளர்த்து வர
9. வருகவே வையகம் எங்கிலும்
வல்லமையான தருமவான்கள் படை
பெருமளவில் பெருகிச் சிறந்து
பேருலகம் தன்னார்வத் தொண்டு
10. தொண்டு நிறைந்த சூழலாக
தலைமையும் தரும ஞான பலம்
கொண்ட வண்ணம் சிறந்துமே
குவலயம் தரும ஞான ஆட்சி
11. ஆட்சிதனை அடைந்து சிறந்து
ஆன்மீக ஞான பலமிக்க
ஆட்சியாக ஞானசித்தர் காலமாக மாறும்
அருளிய துல்லிய ஆசி முற்றே

—சுபம்—